

முதலமைச்சர் அவர்களால் ஜனவரி 29 அன்று கோயம்புத்தூர் கொடிசியா வர்த்தக மையத்தில் நடைபெறவுள்ள சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு 360 (International Textile Summit 360) யினை தொடங்கி வைக்கப்படவுள்ளதையொட்டி அதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து நேற்று (24.01.2026) தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர் திருமதி வே. அமுதவல்லி,. கைத்தறி துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், துணிநூல் துறை ஆணையர் திருமதி இரா. லலிதா, கோ ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திருமதி கவிதா ராமு, மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக மாநில மீனவர் அணி சார்பில்

# திருவொற்றியூரில் பெங்கல் விழா - 10 ஆயிரம் பேருக்கு பரிசு!

## கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன.25-

முதல்வர் அவர்களின் ஆணைங்கிணங்க, துணை முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, துணை பொது செயலாளர், சென்னை மண்டல பொறுபாளர் ஆ.ராசா அவர்களின் அறிவுறுத்தலின் படி தமிழர் திருநாளம், தை திருநாள் பொங்கல் திருநாளை முன்னிட்டு கழக மாநில மீனவரணி சார்பில் மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி. சங்கர் ஏற்பாட்டில் திராவிட பொங்கல் விழா கே.வி.கே.குப்பம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்றது.

படவேட்டம்மன் ஆலயம் அருகில் கூடி இருந்த பெண்கள் பொங்கல் வைத்து சூரியனை வழிபட்டு பாரம்பரிய முறைப்படி கும்மி யடித்து கொண்டாடியபின்பு, மாற்றுதிறனாளி சகோதர சகோதரிகள், தூய்மை பணியாளர்கள், ஆட்டோ ஓட்டும் தொழிலாளர்கள், பெண்கள், கழக தோழர்கள் என 10,000 நபர்களுக்கு பொங்கல் பரிசை மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழங்கினார்.

இதில் வட்ட செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் எம்.சி. வரவேற்பில், மாவட்ட அவை தலைவர் குறுஞ்சி கணேசன், வி.ராமநாதன், இரா.முருகேசன், ஆசைதம்பி, எம்.எஸ்.நாகலிங்கம், இ. ரமேஷ், இரா.சந்துரு, ஏகா.கார்த்திகேயன், சேகர், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக தோழர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### இராயபுரம் மேற்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில்

# சமத்துவ பொங்கல் விழா கால்பாந்தட்ட போட்டி!

## ஆர்.டி. சேகர் – ஐட்ரீம் இரா. மூர்த்தி – ஜே.ஜே.எபினேசர் பரிசு வழங்கினர்!

சென்னை,ஜன.25-

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில், தமிழர் திருநாள் சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு இராயபுரம் செயிண்ட் பீட்டர்ஸ் மைதானத்தில், இளைஞர்களுக்கான மாபெரும் கால்பாந்தட்ட போட்டி 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று, இராயபுரம் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் அ.சாந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வ. மொய்தீன், கு. கௌரிநாதன், பி. விஷால் ஆனந்த், அ. சந்துரு ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

இதில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி,

இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ. பெ. சுரேஷ்,

இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார், லயோலா கே. மதன், கட்பீஸ் பி. சோமசுந்தரமூர்த்தி, வெ. சு. சத்யநாராயணன், எம். கே.இஸ்மாயில், கு. ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், என்.கிருஷ்ணன், எஸ்.புகழேந்தி, இரா. பாலன், எம்.எல். ரவி, கோரியர் பி. முருகன், பாலா. லக்ஷ்மணன், ஜே. கௌரீஸ்வரன் முன்னிலை வகித்தனர்.

போட்டியில் வெற்றிபெற்ற சிறந்த அணிகளுக்கு, சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

அதுசமயம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், மாவட்ட, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் பகுதி மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் பூ.அஜித் குமார், A.மணிகண்டன், வபெ. ர.பாரதி, பா. தீபக், சு. ராஜ்கமல், அ.அரவிந்த், வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர் கா.சீனிவாசன் நன்றியுரை கூறினார்.





